முருகப்பெருமான் துணை

**மகான் சண்டேஸ்வர நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.10.2023**, திங்கட்கிழமை

1. தருமசக்தி கொண்டு உலகினில்
தனிப்பெரும் மாற்றம் நிகழ்த்த
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
குறைவிலா இருபான்நவதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29ம் நாள், 16.10.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு சண்டேஸ்வர நாயனார் யானும்
3. யானும் உலகோர் உயர்வுபெற உரைப்பேன்
உண்மைமிக்க அறிந்து நன்கு
ஞானவழிகளை சன்மார்க்க
நம்பிக்கை வைத்து வர
4. வருகவே மக்களிடை மனபலம்
வாய்மை நெறி அகலாதபடி
தரும ஞான தயவும் கூடி
தன்னார்வத் தொண்டர்களாக
5. ஆகவே மாற்றம் கண்டடையும்
ஆனாலும் கலிவாழ் மக்கள்
மிகையான மாற்றம் வளர்ச்சிக்கு
மேலவர்களான ஞானிகள்பேரில்
6. பேரிலே பூசை வழிபாடு
பேதம் நீக்கும் நடைமுறை
துரிதகதி குருவருள் சக்தியாக
தெரிவிப்பேன் எங்கும் பரவி

7. பரவி உலகினில் மாற்றம்
பண்பாளர்களால் நடக்கும்
துறவி அரங்கன் தொடர்பும் ஆசியும்
தொண்டர்கள் பெற்று வருக

8. வருகவே கலியினில் மக்கள்
வரம் கூடி அரங்கமகான்
தருகின்ற ஆசி தருமபலத்தால்
தானவர்கள் ஞானிகளாகவே

9. ஆகவே சிறப்பறிவு கூடி
அகிலத்தை மாற்றும் வெல்லும்
மிகையான பலங்கள் கூடி
மேலவர்கள் துணை கொண்டு

10. கொண்டுமே கலியுக மாற்றம்
குறைவிலா ஞானயுகமாகும்
உண்டாகும் ஞான சித்தர் காலம்
உருவாகும் ஞான ஆட்சி தானும்

11. தானுரைக்க அரங்கன் நோக்கம்
தட்டாது பூர்த்தி கண்டுமே
ஞானவான்கள் நிறைந்த
நல்லாட்சி மலரக் கூடும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—